Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# ஆன்மீகம் வளர்த்த அரசியல் ஞானி பசும்பொன் முத்துராமலிங்க தேவர்

**முனைவர் R.S. சாந்தி**
உதவிப்பேராசிரியர் (வரலாற்றுத் துறை)
சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்.
naruvinkhannan@gmail.com

**அறிமுகம்:**

தேசியமும் ஆன்மீகமும் அவருடைய இரு கண்கள். செல்வக்குடும்பத்தில் பிறந்த போதும் எளிமையான வாழ்வையே விரும்பியவர். ஒரு இந்துவாகப் பிறந்து முஸ்லீம் தாயால் பாலூட்டி வளர்க்கப்பட்டு கிறித்துவ ஆசிரியரால் பயிற்றுவிக்கப்பட்டவர். எளிமை, வீரம்,உண்மை தியாகம், சேவை.தானம், தர்மம் என அனைத்தையும் தன் வாழ்க்கையில் கொண்டவர். பத்தாம் வகுப்பு வரை மட்டுமே பயின்ற போதும் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் பண்டைய இலக்கியங்கள், தத்துவம் பற்றிய ஆழ்ந்த அறிவு கொண்டவர்.தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர் மட்டுமின்றி இரண்டு மொழிகளிலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசும் பேச்சாற்றல் திறன் கொண்டவர்.எல்லாப் பெண்களையும் தன் தாயாகப் பாவித்தவர். தாம் பிறந்த ஊரின் பெயருக்கேற்றபடி பசும்பொன்னாய் வாழ்ந்தவர். தேர்தலில் தோல்வியே அறியாதவர்.தன் சொத்துக்களை ஏழை மக்களுக்கு தானமாக கொடுத்தவர்.தென்னாட்டு திலகர் என்றழைக்கப்பட்ட அவர் ரேகை சட்டம் என அழைக்கப்பட்ட குற்றப்பரம்பரை சட்டத்தை நீக்கப்போராடி வெற்றிக் கண்டவர். ஆன்மீகம் வளர்த்த அரசியல் ஞானி. மகாத்மா காந்தி மீது மிகுந்த பற்று கொண்டவர்.பிறந்த நாளையும் இறந்த நாளையும் ஒரே நாளாகக் கொண்டவர்(அக்டோபர் 30). பசும்பொன்னில் தெய்வமாய் வழிபடப்பெற்று வருபவர்.

இவை அனைத்திற்கும் உரியவர் **பசும்பொன் முத்துராமலிங்க தேவர்.**

**பிறப்பு:** உக்கிரப்பாண்டிய தேவருக்கும் இந்திராணி தேவிக்கும் வெள்ளிக்கிழமை அக்டோபர் 30 1908 ஆண்டு பசும்பொன் கிராமத்தில் பிறந்தார். இவருடைய தாய் இந்திராணி தேவியின் கனவில் முத்துவயல் இராமலிங்கம் என்ற ஞானி ஆசிர்வாதத்தால் இவர் பிறந்ததால் இவருக்கு முத்துராமலிங்கம் என்ற பெயர் இவருக்கு இவரது தாயால் சூட்டப்பட்டது.[1]ஆனால் துரதிஷ்டவசமாக இவர் பிறந்த ஆறு மாதத்தில் இவரது தாயார் நோய்வாய்பட்டு இறந்ததினால் தாயில்லா குழந்தையான அவரை பாட்டி ராணியம்மாள் அரவணைத்து வளர்த்து வந்தார். இவருக்கு கல்வியை வீட்டிற்கே ஆசிரியரை வரவழைத்து போதிக்க செய்தார். பின்பு நேரடியாகவேகமுதி அமெரிக்கன் மிஷன் எலிமென்டரி பள்ளியில் மூன்றாம் வகுப்பு சேர்க்கப்பட்டார். ஐந்தாம் வகுப்பு முடித்தப்பின்னர் மதுரை அமெரிக்கன் மிஷன் பள்ளியில் 1919 ல் சேர்க்கப்பட்டு ஒன்பதாம் வகுப்பு முடித்தபோது காலரா பரவியதால் பத்தாம்வகுப்பு முடிக்க முடியாமல் வெளியேறினார்.[2] படிப்பினிடையே அவரது பாட்டி இவருக்கு சிலம்பம், குத்து சண்டை, குதிரையேற்றம், வர்மம்,துப்பாக்கி சுடுதல் போன்றவற்றை தக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கசெய்தார்.

**திருமணம் செய்து கொள்ளாமை:** முத்துராமலிங்கதேவர் திருமண வயதை எட்டிய போது திருமணம் செய்துகொள்ள மறுத்தார். இதற்கு இவர் கூறியக் காரணம் குழந்தை பெற்ற பின்பு தன் தாய் நோய்வாய்பட்டு இறந்ததால் தானும் அவ்வாறு ஒரு பெண்ணின் மரணத்திற்கு காரணமாக இருக்க விரும்பவில்லை என்றும் மேலும் தனது தேசிய விடுதலை போராட்ட இயக்கத்திற்கு அது ஒரு தடைகல்லாக இருக்கும் என்றும் கருதினார்.

**அரசியலில் பங்கேற்பு:** இவர் இளமையிலேயே காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். 1928 ல் இவருக்கு இருபது வயது எட்டிய போது இந்திய தேசிய

காங்கிரஸின் கூட்டம் சென்னையில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் காங்கிரஸின் முன்னனி தலைவர்களில் ஒருவரான தி.சீனிவாச ஐயங்கார் தேவரை 'இராமநாதபுரத்தின் இளஞ்சிங்கம்' என்று அறிமுகப்படுத்தினார்.[3]

**காந்தியக் கொள்கைப் பரப்பாளர்:** முத்துராமலிங்க தேவர் இந்திய தேசிய விடுதலை போராட்டத்தில் மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பட்டார். இவரே காந்திய கொள்கைகளை பின்பற்றுபவராக காதி உடைகளை அணிந்தும் தீண்டாமையை எதிர்த்தும் மற்றும் மது, கள் அருந்தாமை போன்றவற்றை பின்பற்றினார்.இவர் செல்வக்குடும்பத்தில் பிறந்தவராக இருந்து முப்பத்திமுன்று கிராமங்களின் ஜமீன்தார் போன்று இருந்தபோதும் ஜமீன்தாரி முறையை ஒழிக்க வேண்டினார். மேலும் அரிசன சனங்களை கோயிலில் வழிபட அனுமதிக்க வேண்டும் எனக் கோரினார்.[4]

**ரேகை சட்டம் எனப்பட்ட குற்றப்பரம்பரை சட்டத்தை எதிர்த்து வெற்றி கண்ட தேவர்:** 1911 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட குற்றப்பரம்பரை சட்டத்தை ஒழிப்பதில் தேவர் முக்கிய பங்கு வகித்தார். இச்சட்டத்தின் படி அரசாங்கம் எந்த ஒரு சாதியையும் எந்தக் கூட்டத்தையும் ஜாமீனில் வர முடியாத பல குற்றங்களை தொடர்ந்து செய்து வருகிறார்கள் என்று கருதினால் அவர்கள் மீது இச்சட்டத்தை புகுத்தலாம். இதற்கு பின்னர் அந்த ஜாதியினர் தங்கள் உரிமையை நிலைநாட்ட நீதி மன்றங்களுக்கு செல்ல முடியாது. 1911 ஆம் ஆண்டு பிரிவு 11 மற்றும் 12ன் படி எந்த உறுப்பினரும் சுதந்திரமாக ஓர் இடத்திலிருந்து மற்ற இடத்திற்கு செல்ல முடியாது. அன்றாடம் இரவு நேரங்களில் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுபவர்கள் தினமும் இருமுறை தங்கள் வருகையை காவல் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவிடும் போது கல்வியறிவு இல்லாத காரணத்தால் கைரேகை வைப்பது வழக்கம். எனவே இச்சட்டம் ரேகை சட்டம் என்று அழைக்கப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் பிரன்மலைகள்ளர்கள் என்ற பிரிவினர் கொண்டு வரப்பட்டனர். இதனால் அவர்களின் தனிமனித உரிமை முற்றிலுமாக பாதிக்கப்பட்டிருந்தது. 1933 ஆம் ஆண்டு இராமநாதபுரத்தை சேர்ந்த ஆப்பநாட்டு மறவர்கள் மீது இச்சட்டம் பாய்ந்தபோது இதன் கொடுமைகளை தேவர் உணர்ந்தார். அன்று முதல் இச்சட்டத்தை நீக்க பாடுபட்டார். நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது இச்சட்டத்தை நீக்க வேண்டும் என குரல் கொடுத்தார். 1936 ஆம் ஆண்டு பேரையூர் மாநாட்டில் இதற்கு எதிராகக் குரல் கொடுத்தார். இந்நிலையில் அப்போதைய அரசாங்கத்தை எதிர்த்து "கைரேகை வைப்பதற்கு பதிலாக கட்டைவிரலை வெட்டிக்கொள்ளுங்கள்" என்று தேவர் முழங்கினார். தேவரின் பேச்சு வேகத்தை கண்ட காவல்துறையினர் இவரை பேச அனுமதிக்கக்கூடாது என நீதிமன்றத்தில் முறையீடு செய்து 144 தடை உத்தரவு பெற்றனர்.இதனால் தேவர் மேடைகளில் பேசுவது தடை செய்யப்பட்டது.இதுதான் வாய்பூட்டு சட்டம் எனப்பட்டது. இச்சட்டம் இந்தியாவில் பாலகங்காதர திலகருக்கும் தேவருக்கும் மட்டுமே போடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.இச்சட்டத்தை நீக்க அவர் கொடுத்த கடுமையான எதிர்ப்பின் காரணமாகவும் ராஜாஜி தலைமையிலான அரசு 1938 ஆம் ஆண்டு அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமிருந்தும் அறிக்கையை கேட்டறிந்தது. இச்சட்டத்தை எதிர்த்துதேவர் பெரிய அளவில் கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்தினார். எனவே சென்னை மாகாண அரசுபாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைத்தது.. பின்னர் நாளடைவில் இச்சட்டம் கைவிடப்பட்டது.

**செட்டிநாடு பகுதியில் காங்கிரஸ் கட்சியை நிலைநிறுத்துதல்:** அக்காலத்தில் செட்டிநாடு பகுதி நீதிக்கட்சியின் கோட்டையாக இருந்து சத்தியமூர்த்தி போன்ற பெருந்தலைவர்கள் கூட செட்டிநாடு பகுதியில் நுழைய முடியாதபோது அவரை நுழைய வைத்து அவருக்கு ஆதரவை பெற்று தந்தார். அதனால் 'கானாடுகாத்தானில் காங்கிரஸை காத்தான்'என மக்களால் புகழப்பட்டார்.[6]

**தேர்தல் புரட்சி:** இவர் தேர்தலின் போது அங்கு சென்று பிரச்சாரம், வாக்கு சேகரிப்பு செய்யாமலேயே மக்களின் வாக்கு வங்கியைப் பெற்றார். இதற்கு எடுத்துகாட்டாக 1937 அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் தொகுதிகளைக்கூறலாம்.[7] 1937 தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி127 இடங்களை பெற்ற போது காந்தி தேவரை மதுரையில் நடைபெற்ற காங்கிரஸ் வெற்றிக் கூட்டத்தில் புகழ்ந்து

உரைத்தார்.[8] இந்த வெற்றியைப் பற்றி இராஜாஜி கூறும்போது 'இந்திய சுதந்திர யுத்தத்தில் தென் புலத்திற்கு நான் 'பார்த்தன்' எனக் கூறுகிறார்கள், நான் 'பார்த்தன்' என்றால் பசும்பொன் தேவர் தான் 'சாரதி' எனக் கூறினார். 1937 ல் பசும்பொன் தேவர் என்ற வீரமிக்க வாலிபர் களத்தில் இறங்கியிராவிட்டால் காங்கிரஸ் ஆட்சி தென்புலத்தில் காலூன்றியிருக்காது என்று மனம் திறந்து பாராட்டினார். அப்போதுதேவரின் வயது 29 தான்.[9]

**பார்வர்டு பிளாக் கட்சியில் தேவர்:** காங்கிரஸ் தலைவர்கள் தன்னலவாதிகளாகவும் பதவியை பெறுவதற்கு கட்சியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர் என்று புரிந்து கொண்டதால் காங்கிரஸை விட்டு வெளியேறி நேதாஜியுடன் இணைந்து பார்வர்டு பிளாக் கட்சியை தேவர் தோற்றுவித்தார். அது முதல் நேதாஜியின் விசுவாசமிக்க தோழராகவும், தளபதியாகவும் உடன்பிறவா சகோதரராகவும்தேவர் திகழ்ந்தார்.[10]

தமிழ்நாட்டில் பார்வர்டு பிளாக் கட்சியை காங்கிரஸ் கட்சியோடு இணைத்து விடுங்கள், மத்திய அமைச்சரவையில் இடம் பெறுங்கள் என்று பலமுறை நேரு கேட்டுக் கொண்ட போது கூடஅதை நிராகரித்தவர் தேவர். இதனால் தேவரை 'தென்னாட்டு போஸ்'என வங்க மக்கள் அழைத்தனர்.[11]

**பிரம்மச்சர்ய விரதம்:** ஒருமுறை திருநெல்வேலி மாவட்டம் விளாத்திக்குளம் அருகில் உள்ள துளசிபட்டினம் என்றகிராமத்தில் ஒரு விசேஷத்திற்கு சென்றிருந்த தேவரை வரவேற்ற 60 வயது பெண்மணி(தேவரின் உறவினர்) அக்கால மற்றும் அவ்வூரின் வழக்கப்படி திலகமிட்டு வரவேற்றார். ஆனால் தேவர் இதனால் தன்னுடைய பிரம்மச்சர்ய விரதம் குலைந்து விட்டதாக கருதி கிட்டதட்ட 45 நாட்கள் தவம் அனுஷ்டித்து அந்த பாவத்தை போக்கிக் கொண்டார்.இவ்வாறு தன்னுடைய பிரம்மச்சர்ய விரதத்தில் உறுதியாக இருந்தார்.[12]

**அவரது பேச்சாற்றல் திறன்:** தேவரிடம் அனைத்து மதத்தினைப் பற்றிய ஆழமான அறிவு காணப்பட்டது. இவர் 1955 ல் பர்மாவில் நடந்த புத்தமத மாநாட்டிற்கு இரண்டாம் தடவையாக சென்றிருந்த போது புத்தர் மற்றும் புத்தமதத்தினை பற்றி எளிமையான உரையை நிகழ்த்தினார்.[13] அம்மாநாட்டில் பங்கு பெற்ற அனைவரும் தேவரைப் பாராட்டினர். அம்மாநாட்டில் பங்கு பெற்ற உச்சண்டான் என்ற புத்தமத துறவி புத்தமதம் பற்றிய தனக்கு தெரியாத பல விஷயங்களை தேவர் எடுத்துக் கூறியதாகவும் அவரை தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டதாகவும் கூறினார்.[14]

தேவர் அந்த மாநாட்டிற்கு வரும் வழியில் ஒரு சிறப்பு வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதாவது புத்த பெண் பிக்குகள்தரையில் படுத்துக் கொண்டு அவர்களின் கூந்தலை தேவர் வரும் பாதையில் விரித்து வைத்திருப்பர். அதன் மீது தேவர் நடந்து வர வேண்டும். இந்த வரவேற்பு புத்த மத தலைமை துறவிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் சிறப்பு மரியாதையாகும். [15]ஆனால் தேவர் இவ்வரவேற்பினை ஏற்க மறுத்து விட்டார். அதற்கு அவர் கூறிய விளக்கம் " நான் புத்தமதத்தினை மதிக்கிறேன். ஆனால் அதே சமயம் இந்து மதம் பெண்களை தெய்வமாகக் கருதுகிறது " எனக் கூறினார்.[16] இந்நிகழ்வு இந்து மதம் பற்றியும், பெண்கள் பற்றியும் அவருக்கு இருந்த உயர்வான எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

**தேவரின் பேச்சாற்றல்:** தேவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை பெற்றவர். தோடர்ந்து மணி கணக்கில் பேசக்கூடியவர். காசி நகரிலுள்ள இந்து சர்வகலாசாலை மாணவர் கூட்டத்தில் இந்துமதப் பண்பு பற்றி மூன்று மணி நேரம் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றி ஆங்கில விற்பன்னர்களை வியக்க வைத்தார். அந்த கூட்டத்திற்கு இந்து சர்வகலாசாலை துணைவேந்தராக இருந்த சர். சி.பி. இராமசாமி ஐயர் தலைமை வகித்தார். அவர் தேவர் பேசி முடித்ததும் எழுந்து உலகத்தின் பெரும் பகுதியை ஆங்கிலம் ஆளுகிறது. உலகாளும் அம்மொழியை எங்கள் தமிழ்நாட்டுச் சிங்கம் முத்துராமலிங்கம் மூன்று மணி நேரம் அடக்கி ஆண்டு விட்டது" என்று கூறி மகிழ்ந்தார்[17]

தேவர் திருமகனார் ஆங்கிலேய அரசுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எதிரான சுதந்திர போராட்ட எழுச்சியை தனது வீரமிக்க உரையால் ஏற்படுத்தியதால் ஆங்கில அரசு தேவருக்கு வாய்ப்பூட்டு சட்டத்தை போட்டது.[18]

**இறப்பு:** நாட்டு விடுதலைக்காகவும் சமூக மேம்பாட்டிற்காகவும் போராடி ஏறத்தாழ 11 ஆண்டுகாலம் சிறையில் கழித்தார். இவர் சிறையில் கழித்த மொத்த நாட்கள் நான்காயிரம்.[19]தேவர் திருமகனார் இபிறந்ததேதி அக்டோபர், 30–1908, புகழுடலை நிலைநிறுத்தி பொன்னுடலை மறைத்துக்கொண்ட தேதி அக்டோபர், 30- 1963. அதாவது பிறந்ததேதிமறைந்த தேதியும் ஒரே நாளில் வரும் வகையில் சிறப்பு பெற்றவர் தேவர். தனது 55 ஆம் வயதில் மதுரை, திருநகர் இல்லத்தில் காலமானார். இந்நாள் ஆண்டுதோறும் தேவர் ஜெயந்தி விழாவாகவும் குருபூஜை விழாவாகவும் நடத்தப்பட்டு வருகிறது.[20]

**வாரி கொடுத்த வள்ளல்:** தேவர் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்ட துறவி ஆவார். இவருக்கு செல்வத்தின் மீது ஈடுபாடு இருந்ததில்லை. ஆதனால்தான் அவருக்கு சொந்தமான 32 கிராமங்களையும் நிலத்தில் உழுது பயிரிட்டவர்களுக்கே சாதி மத வேறுபாடின்றி தானமாக வழங்கினார்.[21] இதில் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆவர். அதனால் தான் இன்றும் என்றும் தெய்வமாக வைத்து வழிபடபடுகின்றார்.ஒவ்வொரு வீட்டின் பூசை அறையிலும் தேவரின் திருவுருவப்படம் காணப்படுகிறது. ஆவர் மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார்.இவர் காவி உடை அணியாமல் வாழ்ந்த துறவி. ஆரசியலில் சீருடை அணியாத தளபதி. எஸ். சீனிவாச ஐயங்கார் தேவரைப் பற்றிக் கூறும்போது" தேவர் தேசியத்தையும் ஆன்மீகத்தையும் கோடுகளாகக் கொண்ட சேது நாட்டு புலி" எனக் கூறினார்.[22] முன்னாள் கீழவை சபாநாயகரான அனந்தசயன ஐயங்கார் " தேவர் ஒரு தேசியவாதி மற்றும் விடுதலைப் போராட்ட தியாகி எனக் கூறினார். [23] நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தேவருக்கு எதிரான வழக்கில் அரசு வழக்கறிஞராக பணியாற்றிய போது கூறும் போது "நான் பார்த்தவரையில் தேவர் ஒரு மகாத்மா" எனக் கூறினார்.[24]

**முடிவுரை:** பெயருக்கு ஏற்றபடி பசும்பொன்னாய் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையை துறந்தவர். தன் உடல் பொருள் ஆவியை இந்நாட்டிற்கே அளித்தவர்பசும்பொன் முத்துராமலிங்கதேவர்.

**வாழ்க தேவர்! வளர்க அவர் புகழ்!**

**நூல்கள்:**

1. புலவர் ப.சங்கரலிங்கனார்- *தேவர் குல திலகங்கள்*, காவ்யா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2011, ப.173.
2. சேது. எஸ். *சேதுநாட்டு சிங்கங்கள்,* காவ்யா பப்ளிகேஷன்ஸ் சென்னை, 2000, ப.34.
3. கிருஷ்ணசாமி வாண்டையார்,*முக்குலத்தோரின் இரண்டாவது மாநாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கதேவரின் உரை,* மதுரை, 1940, ப.59
4. முத்துசாமி எம்,*பசும்பொன் முத்துராமலிங்கதேவர்,* மதுரை, 1994, ப.178
5. எம். சர்க்கரை முனியசாமி,*தேவரின் 113 வது ஜெயந்தி விழா மற்றும் 58வது குருபூஜை விழா மலர்*தினமணி, அக். 30 2020
6. பெருமாள் ஏ.ஆர்,*பசும்பொன் முத்துராமலிங்கதேவர் வீர வரலாறு*,(த) 1994, ப186
7. மேலது ப.187
8. ஆறுமுகம் பிள்ளை கே. *பசும்பொன் முத்துராமலிங்கதேவர் வரலாறு*,(த), 1964 ப.39.
9. கவிஞர் முத்து லிங்கம்*பார் போற்றும் தேவர்,*தினமணி குருபூஜை மலர் அக். 30, 2000 ப.3
10. வே.சுவாமிநாதன் ஒருங்கிணைப்பாளர்,நேதாஜி தேசிய இயக்கம் மதுரை,*நேதாஜியும் தேவரும்* தினமணி மதுரை அக். 30 ப.14
11. கவிஞர் முத்து லிங்கம்தினமணி அக் 30 2000 ப.3
12. முத்துசாமி எம்,*பசும்பொன் நுண்கலை, நான்காம் ஆண்டு நிறைவு விழா மலர்,* 1976 ப.56
13. சண்முகசுந்தரம். முனைவர், *பசும்பொன் சரித்திரம்,* காவ்யா பப்ளிகேஷன்ஸ் சென்னை, 2011, ப.34.
14. மேலது ப.187
15. காமாட்சி முனைவர், *பசும்பொன் தேவரும் எட்மண்ட் பர்க்கும்,* காவ்யா பப்ளிகேஷன்ஸ் சென்னை, 2011, ப.116.

16. எஸ்.குமரப்பன், *சிவகங்கை மாவட்ட தகவல் களஞ்சியம்,* மல்லிகை பதிப்பகம், தேவக்கோட்டை, 2013, ப.13.
17. *பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்,* மணிமேகலை பப்ளிஷர், சென்னை, 1987, ப.87
18. கவிஞர் முத்து லிங்கம், *பார் போற்றும் தேவர்,*தினமணி குருபூஜை மலர் அக். 30,2000
19. இராகவ ஐயங்கார் எம், *செந்தமிழ் வளர்த்த தேவர்கள்,*மணிமேகலை பப்ளிஷர், சென்னை 1948, ப35.
20. வைத்தியலிங்கம் தி. *பசும்பொன் உ.முத்துராமலிங்கதேவர்,* முருகாலயம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2000, ப 36
21. வி. புரமசிவம்,*சுதந்திரப் போரில் செட்டிநாட்டின் பங்கு* அய்க்கண், ப.சுப்பையா அம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், காரைக்குடி, 2013 ப 76
22. *பசும்பொன் தேவர், இந்து தமிழ் திரை தேவர் குருபூஜை சிறப்பு வெளியீடு*, அக்டோபர் 30, 2005 ப.7
23. புலவர் ப.சங்கரலிங்கனார் - *தேவர் குல திலகங்கள்*, காவ்யா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2011, ப.173.
24. மேலது ப.184-85
25. மேலது ப.184-85